# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108520

3/2021/AC/TPR

1. District : மாவட்டம் : திருப்பூர் | PS: காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு: 2021 | FIR No.: மு.த.அ. எண்: | Date: நாள்: 26.02.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 17.2.2021, 19.2.2021, 23.2.2021, 25.2.2021
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.2.2021 | Time நேரம் : 11.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D Vol I | Time நேரம் : 11.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தமிழில் கையெழுத்துப்பட்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 12km வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் : — | (b) Address : முகவரி : பழங்கரை பஞ்சாயத்து அலுவலகம், அவிநாசி, திருப்பூர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : — | District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : V. முத்துகுமரேசன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : வீரப்ப கவுண்டர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 6.6.1986 | (d) Nationality : நாட்டினம் : இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation : தொழில் : நிர்வாக மேலாளர் | (g) Address : முகவரி : 31A, SS நகர், வீதிக்காடு, பெருமாநல்லூர், திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. செல்வம், பஞ்சாயத்து செயலர், பழங்கரை பஞ்சாயத்து அலுவலகம், அவிநாசி, திருப்பூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. [signature] 26/02/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 26/02/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.02.2021

Name: பெயர் ...R. கௌசல்யா
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு
திருப்பூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்ப நீதிபதி. தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 3/2021/AC/TPRவழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் [illegible]செல்யா ஆகிய நான் 26.02.2021-ம் தேதி 11.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது முத்துகுமரவேல், த/பெ.வீரப்பகவுண்டர், 31A, SS நகர், வீதிக்காடு, பெருமாநல்லூர், திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு; அனுப்புநர் முத்துகுமரவேல் த/பெ.வீரப்பகவுண்டர், 31A,SS நகர், வீதிக்காடு, பெருமாநல்லூர், திருப்பூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திருப்பூர் மாவட்டம். அய்யா, நான் திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் SS நகரில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு மகள் இருக்கின்றாள். நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பெருமாநல்லூர் அருகே உள்ள அய்யம்பாளையத்தில் உள்ள நெட்பீல்டு என்ற எக்போர்ட் பனியன் கம்பெனியில் நிர்வாக மேலாளராக கடந்த இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். எனது கம்பெனியின் உரிமையாளர் கார்த்திகேயன் ஆவார். அவர் அவினாசி பழங்கரை கிராமம் சர்வே எண்.314/1, 314/2 ரெட்பீல்ஸ் அவென்யூவில் சைட் எண்.32-ஐ கடந்த 2015-ம் வருடம் அஜீத்குமார் என்பவரிடமிருந்து அவினாசி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.12622/15-ன் படி கிரையம் பெற்றார். மேற்படி மனைபிரிவானது அனுமதியற்ற மனைபிரிவு என்பதால் அதனை வரன்முறைப் படுத்துவதற்கான வேலைகளை பார்த்து வரன்முறை பெற்றுவருமாறு எனது கம்பெனியின் உரிமையாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள் கூறியதன் பேரில் நான் கடந்த 12.02.2021-ம் தேதி ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அதன்பிறகு 15.02.2021-ம் தேதி மதியம் அவினாசி BDO திரு. அரிகரன் அவர்களை அவரது அலுவலகம் சென்று சந்தித்து வரன்முறை சம்பந்தமாக கேட்டதற்கு அவர் பழங்கரை பஞ்சாயத்து செயலர் செல்வம் அவர்களை சந்திக்குமாறு கூறினார். நான் உடனே புறப்பட்டு பழங்கரை பஞ்சாயத்து அலுவலகம் சென்று பஞ்சாயத்து செயலர் திரு.செல்வம் அவர்களை

சந்தித்தேன். அவர் பேங்கில் பணம் கட்டவேண்டும் என்றும் செலான் பில்லப் செய்து வைப்பதாகவும் நாளை வரும்படி கூறி அனுப்பினார். அதன்பேரில் நான் மறுநாள் 16.02.2021-ம் தேதி காலை பழங்கரை பஞ்சாயத்து அலுவலகம் சென்று செல்வம் அவர்களை சந்தித்த போது பில்லப் செய்யப்பட்ட இரண்டு செலான்களை என்னிடம் கையெழுத்து போடச் சொன்னதன் பேரில் நானும் கையெழுத்து போட்டேன். பிறகு இரண்டு செலான்களையும் என்னிடம் கொடுத்து பேங்கில் கட்டி வரச் சொன்னதன் பேரில் அவினாசியில் உள்ள SBI பேங்கில் பணம் ரூ.17,564/-ம் அவினாசி கனரா பேங்கில் பணம் ரூ.9,758/-ம் செலுத்தி அதன் ரசீதை அன்றைய தினமே பழங்கரை பஞ்சாயத்து அலுவலகம் வந்து செல்வம் அவர்களிடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கி விட்டு கூப்பிடுவதாக சொன்னார். மறுநாள் 17.02.2021-ம் தேதி நான் செல்வம் அவர்களை போனில் தொடர்பு கொண்ட போது அவர் BDO விடம் இன்னும் சைன் வாங்கவில்லை மாலைக்குள் வாங்கிவிடுவதாக கூறினார். அதனால் நான் அன்று மாலை நான் பழங்கரை பஞ்சாயத்து அலுவலகம் சென்று செல்வம் அவர்களை சந்தித்து வரன்முறை தொடர்பாக விசாரித்த போது அவர் BDO சென்டுக்கு ரூ.5,000/- கேட்பார் என்றும் ரெடிபண்ணி கொண்டு வந்து தன்னிடம் கொடுத்தால் தான் BDO விடம் உத்தரவு வாங்கி தரமுடியும் என்றும் கூறினார். நான் புறப்பட்டு எனது அலுவலகம் வந்து உரிமையாளர் கார்த்திகேயன் அவர்களிடம் இத்தகவலை தெரிவித்த போது அவர் பணம் கொடுக்க வேண்டாம் பஞ்சாயத்து செகரட்டரியிடம் பேசுங்கள் என்று கூறியதன் பேரில் செகரட்டரி செல்வம் அவர்களிடம் போனில் பேசிய போது அவர் BDO சென்டுக்கு ரூ.5,000/- கேட்கிறார் வேண்டுமானால் BDO விடம் பேசிப் பார்த்து விட்டு கூப்பிடுவதாக சொன்னார். அதன் பிறகு 18.02.2021-ம் தேதி காலை நான் செல்வம் அவர்களது போனுக்கு தொடர்பு கொண்டு பேசிய போது அவர் கூப்பிடுவதாக கூறினார். அதன் பிறகு அவர் கூப்பிடாததால் நான் 19.02.2021-ம் தேதி செல்வம் அவர்களை நேரில் சந்தித்து பேசிய போது அவர் முன்பு கேட்ட மாதிரியே கேட்டார். நான் அவரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அதன் பின் அவர் சென்டுக்கு ரூ.3,000/- கொடு என்றும் மொத்தமாக ரூ.30,000/- கொடுத்து விடும்படியும் கூறினார். அதன் பிறகு நான் எனது ஓனர் கார்த்திகேயன் அவர்களிடம் போனில் தொடர்பு கொண்டு இது குறித்து தெரிவித்த போது அவர் செல்வம் அவர்களிடம் போனை கொடுக்கும்படி கூறியதன் பேரில்

நானும் செல்போனை செல்வம் அவர்களிடம் கொடுக்க அவர் ஓனரிடம் சென்டுக்கு ரூ.3,000/- கொடுத்துவிடும்படி கூறினார். ஓனர் BDOவிடம் பேசிப் பார்க்கட்டுமா என்று கேட்டதற்கு செல்வம் அவர்கள் பேசிப்பாருங்கள் என்று கூறிவிட்டு என்னிடம் போனை கொடுத்தார். நான் ஓனரிடம் பேசிய போது அவர் BDO நெம்பரை வாங்கி வரும்படி கூறியதன் பேரில் நானும் செல்வம் அவர்களிடம் BDO நெம்பரை கேட்க அவர் 7402607180 என்ற எண்ணைச் சொன்னார். அதன் பிறகு அன்றைய தினமே மாலை சுமார் 7 மணியளவில் ஓனர் கூறியதன் பேரில் நான் BDO அவர்களின் மேற்படி செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசிய போது அவர் நேரில் வந்து சந்திக்குமாறு கூறினார். அதனால் மறுநாள் 20.02.2021-ம் தேதி நான் அவினாசி BDO அலுவலம் சென்ற போது BDO அங்கு இல்லாததால் திரும்ப வந்து விட்டேன். பிறகு 23.02.2021-ம் தேதியன்று செல்வம் அவர்களை நான் போனில் தொடர்பு கொண்டபோது எதற்கு BDOவிடம் பேசினீர்கள் அவர் தன்னை திட்டுகிறார் என்று சொல்லி தான் சமாளித்து விட்டதாகவும் மாலை வந்து பார்க்கும்படி கூறினார். அதன் பேரில் நான் அன்று மாலை செல்வம் அவர்களை பஞ்சாயத்து அலுவலகத்தில் சந்தித்த போது அவர் அவசரமாக வெளியே செல்வதாகவும் ஆபிசில் உள்ள பையனை BDO அலுவலகம் அனுப்பியிருப்பதாகவும் உத்தரவு வாங்கி கொண்டு வந்து கொடுப்பார் என்று கூறிவிட்டு சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து அந்த நபர் அலுவலகம் வந்து என்னிடம் உத்திரவை வாங்கி வந்து விட்டதாகவும் செல்போனில் பேசுமாறும் அவரே என்னிடம் அவருடைய போனை கொடுத்தார். அப்போது செல்வம் பணம் ரூ.30,000/-த்தை கொடுத்து விட்டு வரன் முறைபடுத்திய உத்தரவை பெற்றுச் செல்லுமாறு கூறினார். நான் தற்பொழுது பணம் எதுவும் கொண்டு வரவில்லை என்று கூறியதற்கு சரி உத்தரவை வாங்கிச் செல்லுங்கள் பணம் ரூ.30,000/-த்தை ரெடி பண்ணிக் கொண்டு வந்து கொடுத்து விடுமாறு கூறினார். நானும் மேற்படி நபரிடம் இருந்து வரன்முறை உத்தரவை பெற்றுக் கொண்டு ஓனரிடம் கொண்டு போய் கொடுத்தேன். அதன் பிறகு 25.02.2021-ம் தேதி மதியம் செல்வம் அவர்கள் எனது போனுக்கு தொடர்பு கொண்டார். என் போன் ஏற்கனவே கீழே விழுந்ததால் செல்வம் அவர்களின் காலினை அட்டெண்ட் செய்யமுடியவில்லை. பிறகு நான் வேறொரு செல்போனில் இருந்து செல்வத்தை தொடர்பு கொள்ள அவர் பணம் ரூ.30,000/- கொடுக்குமாறு கேட்டார். நான் குறைத்துக் கொள்ளும்படி கூறியதற்கு

ரூ.25,000/- கொண்டு வந்து கொடுக்கும்படியும் நாளை தானே கூப்பிடுவதாகவும் அப்போது தான் வரச் சொன்ன இடத்திற்கு வந்து கொடுக்கும்படியும் கூறினார். நான் மேற்படி தகவலை எனது ஓனர் திரு.கார்த்திகேயன் அவர்களிடம் கூறிய போது அவர் லஞ்சம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்றும் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் தெரிவிக்கும்படி கூறினார். எனக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் புகார் அளிக்கிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxx V.Muthukumaravel. 26/02/21. Sir, Received the complaint on 26.02.2021 at 11.00 hrs and conducted enquiry between 11.15 hrs to 11.45 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.3/2021/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by 7 of PC (Amendment) Act 2018 at 11.45 hrs. Sd/- xxxx (R.Kousalya). 26/02/2021 Inspr. V & AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.Muthukumaravel, S/o.Veerappagounder, 31-A, SS Nagar, Veedhikkadu, Perumanallur, Tiruppur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

R. Kousalya 26/02/2021

(R.Kousalya),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.